<u>சுருக்கம்</u>

ஆதிதிராவிடர் மற்றும் பழங்குடியினர் நலம் – கல்வி - விடுதிகள் - 50 மாணாக்கர்களுக்கு குறைவாக உள்ள 512 ஆதிதிராவிடர் நல பள்ளி / கல்லூரி விடுதிகள் - 2021 – 2022-ஆம் ஆண்டு ரூ.46.08 இலட்சம் மதிப்பீட்டில் மின் அரைப்பான் (மிக்ஸி) வழங்குதல் – நிருவாக ஒப்பளிப்பு வழங்கி - ஆணை வெளியிடப்படுகிறது.

---

<u>ஆதிதிராவிடர் மற்றும் பழங்குடியினர் நலத்(ஆதிந.4)துறை</u>

அரசாணை (நிலை) எண். 81

நாள். 28 .10.2021.
பிலவ ஆண்டு,
ஐப்பசி மாதம் 11-ஆம் நாள்,
திருவள்ளுவர் ஆண்டு 2052.
படிக்கப்பட்டது.

ஆதிதிராவிடர் நல ஆணையரின் கடிதம் ந.க.எண.த1/21390/2021, நாள்.29.07.2021..

*******

<u>ஆணை:-</u>

மாண்புமிகு ஆதிதிராவிடர் நலத்துறை அமைச்சர் 08.09.2021 அன்று நடைபெற்ற மானியக் கோரிக்கையின் போது கீழ்க்கண்டவாறு அறிவிப்பு வெளியிட்டுள்ளார்:-

"ஆதிதிராவிடர் நலத்துறையின் கீழ் இயங்கி வரும் 512 பள்ளி மாணாக்கர் விடுதிகளில் சமையலுக்கு உதவியாகவும் மாணாக்கருக்கு உணவினை உரிய நேரத்தில் வழங்கிட ஏதுவாகவும், தலா ரூ.9,000/- வீதம் 512 மின் அரைப்பான்கள் மொத்தம் ரூ.46.00 இலட்சம் செலவில் வழங்கப்படும். "

2. மேலே படிக்கப்பட்ட கடிதத்தில், ஆதிதிராவிடர் நல ஆணையர், ஆதிதிராவிடர் நலத்துறையின் கீழ் ஆதிதிராவிடர் இன மாணாக்கர்களின் கல்வி நலனுக்காக மாநிலம் முழுவதும் 1326 விடுதிகள் செயல்பட்டு வருகின்றன எனவும், இவற்றில் 50 மாணவர் / மாணவியர்களுக்கு குறைவாக உள்ள பள்ளி / கல்லூரி விடுதிகளில் சமையலுக்குத் தேவையான மசாலாப்பொருட்களை அரைத்து எடுக்கக் கூடுதல் நேரம் ஏற்படுகிறது எனவும், மிக விரைவாக சட்னி மற்றும் மசாலா பொருட்களை அரைத்து, மாணாக்கர்களுக்கு தேவையான உணவு வகைகளை, உணவுப்பட்டியலின்படி உரிய நேரத்தில் வழங்க ஏதுவாக 512 ஆதிதிராவிடர் நல விடுதிகளுக்கு மின் அரைப்பான் (மிக்ஸி) வழங்க, மின் அரைப்பான் ஒன்றின் விலை ரூ.9000/- வீதம் 512 விடுதிகளுக்கு

தமிழ்நாடு ஒளிவு மறைவற்ற ஒப்பந்தப்புள்ளி சட்டம் 1998 மற்றும் விதிகள் 2000-இன்படி கொள்முதல் செய்திட ஏதுவாக ரூ.46,08,000/- நிதி ஒப்பளிப்பு செய்து ஆணை வழங்குமாறு அரசைக் கேட்டுக் கொண்டுள்ளார்.

3. ஆதிதிராவிடர் நல ஆணையரின் கருத்துரு அரசால் கவனமுடன் பரிசீலனை செய்யப்பட்டது. அதனடிப்படையில், ஆதிதிராவிடர் நல விடுதிகளில் 50 மாணாக்கர்களுக்கு குறைவாக உள்ள 512 ஆதிதிராவிடர் நல பள்ளி/கல்லூரி விடுதிகளுக்கு உயர் தரமான மற்றும் பழுது உறுதி உள்ளதாகவும் கொண்ட 512 மின் அரைப்பான்களை தலா ரூ.9000/- வீதம் ரூ.46,08,000/- (ரூபாய் நாற்பத்தாறு இலட்சத்து எட்டாயிரம் மட்டும்) மதிப்பீட்டில் வாங்கி வழங்கிட நிருவாக அனுமதி அளித்து அரசு ஆணையிடுகிறது.

4. மேலே பத்தி மூன்றில் ஆணையிட்டவாறு, ஆதிதிராவிடர் நல பள்ளி / கல்லூரி விடுதிகளுக்கு, தமிழ்நாடு ஒளிவுமறைவற்ற ஒப்பந்த புள்ளி சட்டம் 1998 மற்றும் விதிகள் 2000 இன்படி, நிர்ணயிக்கப்பட்ட விலையில் மின் அரைப்பான் (மிக்ஸி) கொள்முதல் செய்த பிறகு நிதி ஒப்பளிப்பு கோரும் கருத்துருவை அரசுக்கு அனுப்புமாறு ஆதிதிராவிடர் நல ஆணையர் கேட்டுக் கொள்ளப்படுகிறார்.

5. இவ்வாணை நிதித்துறையின் அலுவல் சாரா எண்.46883 நிதித்(ஆதி(ம)பந)துறை/2021, நாள். 28.10.2021 -இல் பெற்ற இசைவுடன் வெளியிடப்படுகிறது.

(ஆளுநரின் ஆணைப்படி)

கே. மணிவாசன்,
அரசு முதன்மைச் செயலாளர்.

<u>பெறுநர்:-</u>

ஆணையர், ஆதிதிராவிடர் நலம், சென்னை-600 005.
இயக்குநர், பழங்குடியினர் நலம், சென்னை-600 005.
அனைத்து மாவட்ட ஆட்சியர்கள்
அனைத்து மாவட்ட ஆதிதிராவிடர் மற்றும் பழங்குடியினர் நல அலுவலர்கள்.
சம்பளக் கணக்கு அலுவலர், சென்னை-600 001.
முதன்மை கணக்காயர் (G & SSA), சென்னை-600 018.
மாநில கணக்காயர், சென்னை-600 009/18/35.
உள்ளுறை தணிக்கை அலுவலர், சென்னை-600 009.

<u>நகல்:-</u>

மாண்புமிகு முதலமைச்சர் அலுவலகம், சென்னை – 600 009.
அமைச்சர் (ஆதிந) அவர்களின் சிறப்பு நேர்முக உதவியாளர்,
சென்னை-600 009.

ஆதிதிராவிடர் மற்றும் பழங்குடியினர் நலத்துறை,
முதன்மைச் செயலாளரின் தனிச்செயலர்,சென்னை-600 009.
நிதித்(ஆதி(ம)பந) வ.செ.பொ-I/வ.செ.பொ-II/வ.வ.I)துறை, சென்னை – 600 009.
ஆதிதிராவிடர் மற்றும் பழங்குடியினர் நலத்(ஆதிந5)துறை,சென்னை- 600 009.
சிறப்பு திட்டச் செயலாக்கத் துறை, சென்னை-600 009.
இருப்புக் கோப்பு/உபரி நகல்.

//ஆணைப்படி அனுப்பப்படுகிறது//

பிரிவு அலுவலர்.
28/10/2021